

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# வள்ளியம்மை இராமநாதன்

## வள்ளி மலர்

08. 02.2018





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னை மடியில்
17.09.1934

ஆண்டவன் அடியில்
09.01.2018

அமரர்

# திருமதி. வள்ளியம்மை இராமநாதன்

அவர்களின்

## திதி வெண்பா

சீர் மிகு ஏவிளம்பி மார்கழித் திங்கள்
அபர பக்க அட்டமி திதியதனில் - தன்னிகரில்
நல்ல நிறை வாழ்வு கண்ட நல்லாள் வள்ளியம்மை
சித்தன்கேணிச்சிவன்பாதம் சிறப்புடனே
சென்றாடைந்தார் தேர்ந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சித்தன் கேணியைப் பிறப்பிடமாகவும்
வச்ப்பிடமாகவும் கொண்ட
அமரர்

# திருமதி வள்ளியம்மை இராமநாதன்

அவர்களின் சிவப்பேறு குறித்த
வள்ளி மலர்

08.02.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்



ஏங்கள் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும்

ஒளி விளக்காய் நின்று

ஆதரித்து எமை வளர்த்தீர்

இன்ப துன்பங்களைப் பகிர்ந்து

எம்குலவிளக்கின் இனிய

நினைவுகளைச் சுமந்த வண்ணம்

தெய்வமாகி விட்ட எங்கள்

குடும்பத்தலைவி பாதக்கமலங்களுக்கு

இம் மலரை அன்புக் காணிக்கையாகச்

சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

இங்ஙனம்

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் வணக்கம்

திருச்சிற்றம் பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்திமகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்து அடி பேற்றுகின்றேனே

திருச்சிற்றம் பலம்

## தேவாரம்

பேராயிரம்பரவி வானோரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க்கென்றும்
வாராத செல்வம் வருவிப்பானை
மந்திரமும் தந்திரமும் மருந்து மாகித்
தீராநோய் தீர்க்க வல்லாந்தன்னை
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைக்கைக் கொண்ட
போரானைப் புள்ளிருக்கும் வேளூரானைப்
போற்றாதே அற்றநாள் போக்கினேனே

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்துண்விரை
யார்கழற்கென்
கைதான் தலை வைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்த்துன்னைப் போற்றிசயசய
போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேன் உடையாய் என்னைக்
கண்டுகொள்ளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நீறணி பவளக்குன்றமே நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடை எம் அற்புதக் கூத்தா
அம்பொன் செய் அம்பலத்தரசே
ஏறணி கொடி எம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமாறிசையே

## திருப்பல்லாண்டு

மீண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்துவம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடியீசற்காட்
செய் மின் குழாம் புகுந்து
அண்டங்கடந்த பொருள் அளவிலதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருளொன்றே
பல்லாண்டுகூறுதுமே

## திருப்புராணம்

கற்பனைக் கடந்தசோதி
கருணையே உருவம்ஆகி
அற்புதக் கோலம் நீடி
அருமறைச்சிரத்தின் மேலாம்
சிற்பரவியோமம் ஆகும்
திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற
பூங்கழல் போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

பத்தியால் யானுன்னைப் பலகாலும்
பற்றியே மாதிருப்புகழ் பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற்கருள்வாயே
உத்தமாதான சற்குணர்நேசா
ஒப்பிலா மாமணிக்கிரிவாசா
வித்தகா ஞானசத்திநிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்கமன்னன்
கோண்முறையரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

## திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகன், மகள்மார் புலம்பல்

எம்மினிய அம்மாவே!
பாசமுடன் எமை வளர்த்து
பாசினில் மிளிர விட்ட
பண்பு மிக்க அம்மாவே
நற் கல்வி நாம் கற்க
நல்லுரைகள் கூறுவீர்கள்
அப்பாவின் அறிவுரைகள் மீறாது
அயலவர்கள் உறவினர்கள்
அனைவரையும் அரவணைத்து
அன்புடன் வாழ வைத்தீர்
தெய்வ வாழிபாடு சிறப்புடன்
செய்க என என்றென்றும்
இடித்துரைத்து அதற்கமைய
வீட்டுடன் ஓர் வைரவர் கோயில் கட்டி
பொங்க விட்டு பூசை பண்ணி
எங்கள் வாழ்வு இலங்கிட
எத்தனையோ செய்து வைத்தீர்
எமக்கேற்ற துணை தன்னை
சிறப்புடயே தேர்ந் தெடுத்து
பேரன், பேர்த்தி, பூட்டன், பூட்டி
பேறணைத்தும் பெற்று
பெருமகிழ்வோடு இருக்கும் வேளை
காலனவன் கைப்பிடியில்
எமையெல்லாம் கலங்க வைத்து
எங்கு சென்றீர்...... எங்கு சென்றீர்......
காலமெல்லாம் உங்கள் நிழல்
எம் மனதில் என்றும் நிற்கும்
இறைவனதுதிருப்பாத மலரடியில்
சென்றடைந்து என்றும் வாழ
வாாழ்த்துகின்றோம்...........

விஜயலட்சுமி, சத்தியலட்சுமி,
வரலட்சுமி, சிவகுமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள்

மணமாகி மறு வீடு
நாம் வந்த அன்று முதல்
தம்பிள்ளை நாம் என்று
தாயாக மாறினீர்கள்
அன்புக்;கும் பண்புக்கும்
அறத்திற்கும் பெருமைக்கும்
ஓர் எழுத்து நீங்கள் என
என்றென்றும் வாழ்த்தீர்கள்
உங்கள் வழியில் நாம் நடக்க
உவப்பான பலகதைகள்
அன்பு மொழி அறிவுரைகள்
பாசமுடன் எடுத்துரைத்தீர்கள்
உங்கள் நினைவில் உங்கள் முகம்
என்றென்றும் மறவாது
இறைவனடியில் நீங்கள்
இளைப்பாற இறைவனிடம்
வேண்டுகிறோம்...........

குகனேசராசா,
குகயோகநாதன், உமா

## பேர்த்திமாரின் புலம்பல்

அம்மம்மாவே எங்களை விட்டு எங்கு சென்று விட்டீர்கள்.......
நீங்கள் ஏலாமல் இருந்தாலும் நீங்கள் இருக்கிறீர்கள் என்ற
துணிவோடு தானே நாம் வாழ்ந்தோம் இனி எங்கு தான் உங்களை
பார்ப்போம்.. பூட்டப்பிள்ளைகளை
எல்லாம் நன்றாக வளர்த்தீர்கள் உங்களுடைய ஆத்மா
சாந்தியடைய இறைவனை பிராத்திக்கிறோம்............

துஸ்யந்தி, கஜலட்சுமி,
கிருசா, தசா

## பேரப்பிள்ளைகளின் பலம்பல்

நாட்கள் போனதம்மா ஆறவில்லை பிரிவின் துயரம்
நீங்கள் இல்லா உலகமதில் வாசல் இல்லா
வீடானோம் அம்மையே இறைவனில்லா கோயிலாக
பிறையில்லா வானமாக திசையில்லா படகா திகைக்குதம்மா
இனி எங்களுக்கு உன்னைப்போல் யார் உள்ளார்
ஒய்து விட்ட ஓவியமே கரைந்து விட்ட காவியமே
வளர முடியாத வளர்பிறையே வருவாயா மறுபடியும்
எம் வள்ளி அம்மையே பிரிவால்
துயருறும் பேரன் பேர்த்தி பூட்டப்பிள்ளைகள்.........

நோர்வே

**ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரன்மார் புலம்பல்

அன்புள்ள அம்மம்மாவே எங்கள் குரல் கேட்டால்
ஓடி வருவீர்கள் வாய்யா என்று அரவணைத்து
உணவு அருத்தச் செய்வீர்கள் அன்பான
அம்மம்மாவின் திடீர் மரணம் எங்களை
துயரத்தில் ஆழ்த்தியது உங்களின் அன்பான
வார்த்தையை எப்போது தான் கிடைக்குமோ
உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்..............

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

**பிரபாகரன் (பிரான்ஸ்),டிசாகரன் (பிரான்ஸ்)**
**கோபி, கேதீஸ், குகப்பிரியன்,**
**தனிகன், நகுலன்**

## பேரமகனின் புலம்பல்

எனது பாசமிகு அம்மம்மாவுக்கு !
எமது குடும்பத்தின் ஒளிவளக்காய்
குலதெய்வமாக விளங்குகின்ற எனது அன்புக்குரிய
அம்மம்மா திடீரென இறந்துவிட்டதாக கூறியவுடன்
ஓடிவந்து தொட்டுப்பார்த்த பிறகு இறந்த நிலையை
அறிந்து கொண்டேன்.
குழந்தையாக சீராட்டி தாலட்டி
எம்மை யெல்லாம் ஆளாக்கி வளர்த்து விட்ட என்
அம்மம்மாவே. இன்ப துன்பங்களை குடும்பத்தில்
பகிர்ந்து கொண்டவரே உணவு சமைத்து
சாப்பாட்டுக்கு குறைவிடாது நேரத்துக்கு நேரம்
தந்து எம்மையெல்லாம் வளர்த்துவிட்ட அம்மம்மாவே.
சிவனே சிவனே என்று அதிகாலை கோயிலுக்குச்
சென்று விட்டு வந்து தான் தேநீர் குடிக்கும்
வழமை கொண்டவர் . கடவுள்வழிபாடு பற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு குடம்பத்தினை பின்பற்றுவதற்கு வழிகாட்டியவர்கள்ளம் கபடம் அற்ற தூய நெஞ்சம் உள்ள அம்மம்மா எல்லோர் இடத்திலும் அன்பாகவும் பண்பாகவும் சிரித்துக் கொண்டு கதைக்கும் இனிமையானவர்.
எனது அம்மம்மா மார்கழி மாதத்தில் உயிர் பிரிந்து சொர்க்கத்திற்கு சென்றுள்ளார் என்று கூறினால் மிகையாகாது இனி எப்போது அம்மம்மாவை காண்போம் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல சிவசிதம்பரேச பெருமானின் பாதார விந்தங்களை வேண்டிக்கொள்ள பிராத்திப்போமாக.

**பிரிவால் துயருறும்**
**அம்மம்மாவின் புலம்பலில் பாசமிகு பேரன்**
**சாந்தன்,நெசிஸ் பிரார்த்திப்போமாக**
**அலுவலர் தலைமை**
**பொருள் நிலையம் யாழ்ப்பாணம்**

## பூட்டப்பிள்ளைகள் புலம்பல்

எங்கள் பூட்டியே என் பூட்டன் என்னை மாதிரி என்று சொல்வீர்களே! பூட்டப்பிள்ளைக்கு (தர்மிகாவிற்கும் நடை பழக்கி விட்டு நீங்கள் படுக்கையில் படுத்து இறைவனடி சேர்ந்து விட்டீர்கள் பூட்டியை பார்க்க இனி எங்கே பூட்டியை பார்ப்பது. உங்கள் ஆத்ம சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**சர்மிலன், தர்மிகா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கௌரி காப்பு

## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எற்குற்றமும் வாராமற்கா

## வேண்டுதற் கூற்று

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்பாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே அம்மாகாளி தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோம்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோம்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகைபாற்றுப் படலமிதை வழிவழியாய்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிடுவீர்நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டுவாய்

நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தேவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தலைவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்ம
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோரர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இறைந்து அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்கவெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏங்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவொடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமரந்த கௌரியே காப்பருளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்த ஷஷ்டி கவசம்



## காப்பு

துதிப்போர்க்கு வல்வினை போம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நி'டையுங் கைகூடும். நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசம் தனை.

அமர ரிடர்தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

## நூல்

*சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண் கிணி யாட
மையல் நடனஞ்செய்யும் மயில்வா கனனார்
கையில் வேலால் எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக!
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரரரர
ரவண பவச ரிரிரிரிரிரி
விநபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசுர வணப வருக வருக
அசுரர் குடிகொடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயம் கிலியும் அடைவுடன் சவ்வும்
உய்யொளி சௌவும் உயிரைங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண் முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன் தினம் வருக!
ஆறு முகமும் அணிமடீ அறமு
நீறிடு நெற்றியில் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியம்
ஈராறு செவியில் இலகுகுண்டலமும்
ஆறிரு திணிபுயத் தழகிய மாரிபில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியம்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தனம் பதித்த நற்சீராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்த முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்திருவடியை உறுதியென் றெண்ணும்
எந்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகளி ரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமி ரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை உனியவேல் காக்க
மார்பை ரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிடண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதகை அருள்வேல் காக்க
பழபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
பணைத் தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகளி ரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கையி ரண்டும் பின்னவள் காக்க
நாவில் சரஸ்வரி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு துமெனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேலல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும், குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசு காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இரட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர் களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதம் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினில் முட்ட பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடு விடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந் தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள்கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
குலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புரதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீஎனக் கருள்வாய்
ஈரேழு உலகமும் எனக் குறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன் திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே பவமொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா வதியைக்
காத்துத் தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பாலகு மாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந்திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணிய
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவது வாகிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தர் சஷ்டிக் கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்தநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கிலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங்கு அருளுவர்
மற்றவ ரல்லாம் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதனெனவம் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரட்டாய் வாழ்வார்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
நல்லோர் நினைவில் நடனம் புரியம்
சர்வ சத்ரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குரபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குரபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி!
தேவர்கள் சேனா பதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!
திறமிகு திவ்விய தேகா போற்றி!
இடும்பா யுதனே இடும்பா போற்றி!
கடம்பா போற்றி கந்தா போற்றி!
வெட்சி புனையும் வேளே போற்றி!
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே!
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்!
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்!

**முற்றும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டு வைத்தியக் குறிப்புகள் சில

1.அஜீரணம் குணமாக :- கறிவேப்பிலை, இஞ்சி,சீரகம் மூன்றையும் 1 ரம்ளர் நீரில் கொதிக்க வைத்து ஆற வைத்த நீரை வடிகட்டி குடிக்கு மாறும்.

2.நல்ல பசி எடுக்க :- விளாத்தி மரத்தின் கொழுந்து இலைகளை கசாயம் வைத்து குடிக்க வாயு நீங்கி நல்ல பசி உண்டாகும்.

3. வாயுத் தொல்லை நீங்க :- வெள்ளைப் பூண்டை பாலில் வேக வைத்து சாப்பிட்டு வர சுகமாகும்.

4. வயிற்று நோய் குணமாக :- சீரகத்தை வறுத்துப் பொடி செய்து மோரில் சாப்பிட குணமாகும்.

5. வயிற்றுப் பூச்சிகள் ஒழிய :- 1)பாகற்காய் விதைகள் அரைத்து பாலுடன் கலந்து அருந்தி வர மாறும். 2)பாகற் கொடி இலையை பிழிந்து சாற்றினை அருந்த வேண்டும்.

6. தொப்பை குறைய :- சுரைக்காய் வாரம் 2 தடவை சாப்பிட்டு வர குறையும்.

7.வயிற்றுக் கோளாறுகளுக்கு :- புதினா கீரை துவையல் நல்ல மருந்தாகும்.

8. வயிற்றுப் பொருமல் அஜீரணம் :- ஏலக்காய் பொடி தேனில் ஒரு நாளைக்கு 3 வேளை சாப்பிட வேண்டும்.

9. வயிறு பெருத்து உடல் சிறியதாக உள்ள குழந்தைகளுக்கு :- கோரைக் கிழங்கைத்தோல் நீக்கி சூப் வைத்து கொடுக்க சரியாகும்.

10. வயிற்றுப்புண் ஆற :- வாழைப்புவை வாரம் 1 நாள் கூட்டாக செய்து சாப்பிடமாறும்.

11. தொடர் வயிற்றுப்போக்கு :- பப்பாசிப்பழம் சாப்பிட வேண்டாம்.

12. குடல் புண் குணமாக :-1) அகத்திக் கீரை நல்லுணவாகும். 2) வில்வம் இலைகள் ஊறிய நீரை அதிகாலையில் வெறும் வயிற்றில் அருந்தி வர வேண்டும். 3) தேங்காய் துண்டுகளை (சொட்டு) மென்று பாலை உள்ளிறக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4)முட்டை கோவாவை நறுக்கி சிறிது உப்பும் சேர்த்து நீர் விட்டு அவித்து அந்நீரை வடித்துக் குடிக்க வேண்டும்.

13.வயிற்று கோளாறுகள் நீங்க :- முள்ளங்கிக் கிழக்கு சமைத்து உண்டு வர வேண்டும்.

14.பிரயணத்தின் போது வாந்தி நிற்க :- ஒரு நெல்லிக்காய் வீதம் 41 நாட்கள் சாப்பிட வேண்டும்.

15.நெஞ்சுச் சளி :-தேங்காயெண்ணெயைக் கற்பூரம் சுடவைத்து நெஞ்சில் தடவ குணமாகும்.

16.இருமல் நிற்க :- முற்றிய வெண்டைக்காய் சூப் செய்து குடித்து வந்தால் உடனே நிற்கும்.

17.தலைவலி குணமாக :-குப்பை மேனிச்சாறு தடவ குணமாகும்.

18.சளித் தொல்லை தீர :-அறுகம்புல் சாறு பருகிவர மாறும்.

19.கண்ணோய் மாற :- 1)முருங்கைக் கீரை சாப்பிட வேண்டும். 2)அன்னாசிப்பழம் சாப்பிட்டு வரவும் மாறும்.

20.பல்வலி குணமாக :- கொவ்வைப்பழம் சாப்பிட குணமாகும்.

21.காது அடைப்பு நீங்க :- தூதுவளைச்சாறு 2 சொட்டு காதில் விட காதடைப்பு நீங்கும்.

22.பித்த வெடிப்பு :- வேப்பெண்ணெயை மஞ்சள் சேர்த்து பற்றுப்போட குணமாகும்.

23.கழுத்து வலி குணமாக :- ஆடாதோடை இலையை தோங்காயெண்ணெய் விட்டு வதக்கி ஒத்தடம் கொடுக்க குணமாகும்.

24.மூலவியாதி, மூலத்தால் இரத்தம் போதல் :- 1) பப்பாசிபழம் சாப்பிட்டு வர மலச்சிக்கல் நீங்கி மூலமும் தீரும். 2)பிள்ளைக் கற்றாளை இதழில் 1 சிறு துண்டு வெட்டி தொலை அகற்றி விட்டு நன்கு கழுவிய பின் தொண்டைக்குள் போட்டு விழுங்கி விட வேண்டும் சீக்கிரம் கணமாகும்.

25.மார்புவலி குணமாக :- வெந்தயத்தை வேகவைத்து தேன் விட்டு கடைந்து உட்கொள்ள குணமாகும் .

26.இதயபடபடப்பு நீங்க :- தினசரி 1 பேரிச்சம்பழம் சாப்பிட வேண்டும்.

27.இடுப்புவலி குணமாக:- வெள்ளைப்புண்டு, கருப்பட்டி சேர்த்து உண்டு வர குணமாகும்.

28.நினைவாற்றல் பெருக:- வல்லாரை உண்டு வர வேண்டும்.

29.உடல் எடை அதிகரிக்க :- பாலில் 1ஸ்பூண் தேன் கலந்து குடித்துவர எடை கூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30.உடல் எடை குறைய:- பப்பாசிக்காயை சமைத்து உண்டு வர தடித்த உடம்பு குறையும்.
31.இருதய நோய்:-பூண்டைச் சுட்டு சாப்பிட்டு நீர் குடிக்க குணமாகும்.
32.பூச்சிக் கடிகளுக்கு :- மிளகு சாப்பிடுவதால் உடலிலுள்ள நஞ்சு அழிந்து விடும்.
33.மீன், கருவாடு சாப்பிட்டவுடன் பால் குடிக்கக் கூடாது.
34.புற்று நோய் குணமாக :- வேப்பிலை அறுகம்புல் சாறு உண்டு வர குணமாகும்.
35.தலைவலி குணமாக :- டி அல்லது காப்பியில் சிறிதளவு எலிம்பிச்சம் பழச்சாறு விட்டு குடிக்கமாறும்.
36.தாய்பால் பெருக:- வெந்தயகஞ்சி சாப்பிட்டு வரவேண்டும்.
37.வேர்க்குரு மறைய :- சந்தனத்துடன் எலுமிச்சைசாறு கலந்து தடவ மாறும்.
38.விக்கல் நிற்க :-நெல்லிக்காய் சாறுடன் தேன் கலந்து சாப்பிடமாறும்.
39.நகச்சுற்று குணமாக:- மஞ்சள். அறுகம்புல், சுண்ணாம்பு கலந்து பூச மாறும்.
40.டான்சில் மாற (உள்நாக்கு) சம அளவு உப்பு, புளி சேர்த்து நன்கு அரைத்து நாக்கில் பூச வேண்டும்.
41.கண் எரிச்சல் தீர:-நந்தியா வட்டைப்பூவால் ஒத்தடம் கொடுக்க மாறும்.
42.சர்க்கரை வியாதி தீர:- கொவ்வைக்காய் தினமும் 2 உண்டு வர வேண்டும்.
43.தேன்விக்ஷம் இறங்க:- 1)நாயுருவியிலையை கசக்கி கடிவாயில் தேய்க்க விக்ஷம் இறங்கும். 2)பலாப் பாலினை கடிவாயில் பூச விக்ஷம் இறங்கும்.
44.இதயத்தின் குத்துவலி குணமாக:- கருந்துளசி, செவ்வரத்தம்பூ கசாயம் அருந்த 10 நாட்களில் குணமாகும்.
45.உள்ளங்கால் ஏரிச்சல் தீர:- பாவல் இலைச்சாறு உள்ளங்களில் தடவி வர மாறும்.
46.அனைத்துப் பல் நோய் கரைக்கும்:- மகிழ இலை கசாயத்தால் வாய் கொப்பளிக்க நீங்கும்.
47.பல் உறுதிபட:- மகிழங்காயை வாயில் மென்று அடக்கி வைத்திருக்க பல் ஆட்டம் நீங்கும்.
48.முகவசீகரம், அழகு பெற:- தூதுவளைப்பூ-10, பாலில் சர்க்கரை சேர்த்துக்காய்ச்சி அருந்தி வர வேண்டும்.
49.வாதம் தீர:- நன்னாரிவேர் கசாயம் செய்து சாப்பிட்டு வர தீரும்.
50.மூட்டு வலி தீர:-நொச்சி அலைச்சாறு, மிளகுதூள், நெய் சேர்த்துச் சாப்பிட்டு வர சுகமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நன்றி நவிலல்



எமது குடும்பத்தலைவியின் மறைவுச் செய்தியைக் கேட்டு ஓடோடி வந்து உதவிகள் செய்தவர்களுக்கும் உறவினர் நண்பர்களுக்கும், தொலைபேசி கடிதமூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுகும், இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் பதாதைகள் வெளியிட்டு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோர்களுக்கும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், உயர்தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள், யாழ் பொலிஸ் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் பல்வேறு வழிகளில் உதவி செய்த அனைவருக்கும், இன்று எமது அழைப்பை ஏற்று இங்கு இன்றைய வீட்டுக்கிருத்திய நிகழ்வில் பங்கு கொண்ட அனைத்து அன்பு உள்ளங்களிற்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிவன்கோவில் வீதி,
சித்தன்கேணி.



இங்ஙனம்,
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருச்சம்

இராசம்மா
விசாலாட்சி
இராசலட்சுமி
கனகசபை
அன்னம்மா
*வள்ளியம்மை + தம்பையா இராமநாதன்

- (பிரான்ஸ்) விஜயலட்சுமி / குகனேசராஜ
  - பிரபாகரன்
    - (நோர்வே) லோஜிதன், அனுசுஷன்
  - துஷ்யந்தி கிறிஸ்தோப் குரு
  - டிசாகரன் காஞ்சனா
    - பேரப்பிள்ளைகள்: கிறிசாந்த, குகசாந்த, யதுக்ஷர்
- சத்தியலட்சுமி / ஏகாம்பரம்
  - டுசாந்தன் (பொலிஸ் உத்தியோகத்தர்)
  - கஜலட்சுமி இராஜேஸ்வரன்
  - கேதீஸ்வரன்
    - பேரப்பிள்ளைகள்: சர்மிலன், தர்மிகா
- (கனடா) வரலட்சுமி / குகன்
  - கிறிக்ஷர்
  - தக்ஷர்
  - கோபி
- சிவகுமார் (ஆசிரியை) / உமா (ஆசிரியர்)
  - குகபிரியன்
  - கனிகன்
  - ரகுலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org